44

42313

பாரதி கீதத் திரட்டு

ஸ்ரீ. சி. சுப்பிரமணியபாரதி

O-)1MSU,K
N47
108899

பாரதி கீதத் திரட்டு

ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதி.

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே.”

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

காபிரைட் ரிஜிஸ்தர் செய்தது.

2வது பதிப்பு] 1947 [விலை அணா 4

முகவுரை.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சிறு மாணவர்களுக்குப் படிப்பதற்கேற்ற பாடல்களைத் தொகுத்து ஒரு புத்தகம் அச்சிட்டுத் தரவேண்டுமென சில ஜில்லா போர்டுகளும், முனிசிபாலிடிகளும், எங்களைக் கேட்டுக் கொண்டதின் பேரில், இச் சிறு திரட்டை வெளியிட்டிருக்கின்றோம்.

இதில் அடங்கிய பாடல்கள் ஸ்ரீ பாரதியாரின் தேசீய கீதங்கள், கண்ணன் பாட்டு, தோத்திரப் பாடல்கள் முதலிய அனேக நூல்களிலிருந்து சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

பாரதி பிரசுராலயத்தார்.

சி. சுப்ரமண்ய பாரதி.

ஓம் சக்தி.

பாரதி கீதத்திரட்டு

1. வந்தே மாதரம்.

தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.

ராகம்—நாதநாமக்கிரியை. தாளம்—ஆதி.

பல்லவி.

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம். (வந்தே)

சரணங்கள்.

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே. (வந்தே)

2. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி? ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ?
(வந்தே)

3. ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(வந்தே)

4. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.
(வந்தே)

5. புல்லடிமைத் தொழில் பேணி—பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி.
(வந்தே)

---

2. பாரத தேசம்.

ராகம்—புன்னுகவராளி.

பல்லவி.

பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்.

சரணங்கள்.

1. வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்;
பள்ளித் தல மனைத்துங் கோயில் செய்குவோம்;
எங்கள்
பாரத தேசமென்றுதோள் கொட்டுவோம்.

2. சிங்களத் தீவினுக் கோர் பால மமைப்போம் ;
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம் ;
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்.

3. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம் ;
சிங்க மராட்டியர் தங் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

4. காசி நகர்ப் புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர் கருவி செய்வோம்;
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்க மளிப்போம்.

5. குடைகள் செய்வோம், உழுபடைகள் செய்வோம்;
கோணிகள் செய்வோம், இரும்பாணிகள்
செய்வோம் ;
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம் ;
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்.

6. காவியஞ் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம் ;
கலை வளர்ப்போம், கொல்லருலை வளர்ப்போம் ;
ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம் ;
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்.

7. 'சாதி யிரண் டொழிய வேறில்லை' யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த
மென்போம் ;
நீதி நெறியி னின்று பிறர்க் குதவும்
நேர்மையர் மேலவர் ; கீழவர் மற்றோர். (பாரத)

3. எங்கள் நாடு.

ராகம்—பூபாளம்.

1. மண்ணு மிமய மலை எங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே!
பன்னரு முபனிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கிலை யீடே.

2. மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரா னருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே.

3. இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்
கன்னலுந் தேனும் கனியு மின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவ மிஃதை யெமக்கிலை யீடே.

4. நாட்டு வணக்கம்.

சுதேச வந்தனம்.

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

1. எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
   யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
   முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
   சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென்
   வாயுற வாழ்த்தேனோ—இதை
(பல்லவி) 'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
   என்று வணங்கேனோ?

2. இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த் தரு
   ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
   அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னியராகி நிலவினி லாடிக்
   களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடி, இல்
   போந்ததுமிந்நாடே—இதை
(பல்லவி) 'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
   என்று வணங்கேனோ?

3. மங்கைய ராயவர் இல்லற நன்கு
   வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
   தழுவிய திந்நாடே—மக்கள்

துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) 'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

---

5. பாரத மாதா.

தான தனந்தன தான தனந்தன
தானனத் தானனே.

1. முன்னை யிலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடை வில்?—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவி நல்
ஆரிய ராணியின் வில்.

2. இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்த வில் யாருடை வில்?—எங்கள்
மந்திரத் தெய்வதம் பாரத ராணி
வயிரவி தன்னுடை வில்.

3. 'ஒன்று பரம் பொருள்; நா மதன் மக்கள்;
உலகின்பக் கேளி' யென்றே—மிக
நன்று பல் வேதம் வரைந்த கை பாரத
நாயகி தன் திருக் கை.

4. சித்த மயமிவ் வுலகம் உறுதி நம்
சித்தத்தில் ஓங்கிவிட்டால்—துன்பம்
அத்தனையும் வெல்ல லாமென்று சொன்ன சொல்
ஆரிய ராணியின் சொல்.

5. சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினைத்
தட்டி விளையாடி—நன்
றுகந்த தோர் பிள்ளை முன் பாரத ராணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை.

6. காண்டிவ மேந்தி உலகினை வென்றது
கல்லொத்த தோளெவர் தோள்?—எம்மை
ஆண்டருள் செய்பவள், பெற்று வளர்ப்பவள்
ஆரியர் தேவியின் தோள்.

7. சாகும் பொழுதில் இருசெவிக் குண்டலம்
தந்த தெவர் கொடைக் கை?—சுவைப்
பாகு மொழியிற் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை.

8. போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்ற தெவருடை வாய்?—பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய்.

9. தந்தை யினிதுறத் தானரசாட்சியும்
தையலர் தம்முறவும்—இனி
இந்த உலகில் விரும்புகிலே னென்ற
தெம்மனை செய்த வுள்ளம்.

10. அன்பு சிவம் உல கத்துயர் யாவையும்
அன்பினிற் போகு மென்றே—இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழி யெங்கள் அன்னை மொழி.

11. மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன் மதி—தன்
மதியினிற் கொண்டதை நின்று முடிப்பது
வல்ல நம் அன்னை மதி.

12. தெய்விகச் சாகுந் தலமெனும் நாடகம்
செய்த தெவர் கவிதை?—அயன்
செய்வ தனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி யருட் கவிதை.

---

6. சுதந்திரப் பெருமை.

"தில்லை வெளியிலே கலந்துவிட்டாலவர்
திரும்பியும் வருவாரோ" என்னும் வர்ணமெட்டு.

1. வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ? (வீர)

2. புகழுநல் லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறு மீனத் தொண்டியற்றியும் வாழ்வதற்
கிச்சையுற் றிருப்பாரோ? (வீர)

3. பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ? (வீர)

4. மானுடஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை யுணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினு முண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ? (வீர)

5. விண்ணி லிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ? (வீர)

6. மண்ணிலின் பங்கீனை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுற்
கைகொட்டிச் சிரியாரோ? (வீர)

7. வந்தே மாதர மென்று வணங்கிய பின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதர மொன்றே தாரக
மென்பதை மறப்பாரோ? (வீர)

---

7. மாதாவின் துவஜம்

பாரத நாட்டுக் கோடியினைப் புகழ்தல்

தாயுமானவர் ஆனந்தக்களிப்பு வர்ணமெட்டு.

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

சரணங்கள்

1. ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதர' மென்றே
பாங்கி னெழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

2. பட்டுத் துகிலென லாமோ?—அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித்தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம் (தாயின்)

3. இந்திரன் வச்சிர மோர் பால்—அதில்
எங்கள் துருக்கரிளம்பிறையோர்பால் (தாய்)
மந்திர நடுவுறத் தோன்றும்—அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தாயின்)

4. கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரிய ரவ்வீரர்;—தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பர். (தாயின்)

5. அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர்! (தாயின்)

6. செந்தமிழ் நாட்டுப் பொருநர்,—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர், (தாயின்)

7. கன்னட ரெட்டியரோடு,—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்களொப்ப—நிற்கும்
பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர், (தாயின்)

8. பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர், (தாயின்)

9. பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்த நன்னாட்டார்,
துஞ்சும் பொழுதினுந் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும் (தாயின்)

10. சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க! (தாயின்)

---

8. விடுதலை.

(பிலஹரி)

விடுதலை! விடுதலை! விடுதலை!

1. பறையருக்கு மிங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு
மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி
வாழ்வ மிந்த நாட்டிலே. (விடுதலை)

2. ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப
திந்தியாவில் இல்லையே;
வாழி கல்வி செல்வ மெய்தி
மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொரு நிகர்
ஸமானமாக வாழ்வமே. (விடுதலை)

3. மாதர் தம்மை யிழிவுசெய்யு
மடமையைக் கொளுத்துவோம்;
வையவாழ்வு தன்னிலெந்த
வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
ஸரி நிகர் ஸமானமாக
வாழ்வ மிந்த நாட்டிலே. (விடுதலை)

---

9. சுதந்திரப்பள்ளு

(பள்ளர் களியாட்டம்)

ராகம்—வராளி. தாளம்—ஆதி.

பல்லவி

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென்று
(ஆடுவோமே)

சரணங்கள்

1. எங்கும் சுதந்திர
மென்பதே பேச்சு—நாம்
எல்லோருஞ் சமமென்ப
துறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி
யூதுவோமே—இதைத்
தரணிக் கெல் லாமெடுத்
தோதுவோமே. (ஆடுவோமே)

2. உழவுக்குந் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை
நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம்
ஓய மாட்டோம். (ஆடுவோமே)

3. நாமிருக்கு நாடு நம
தென்ப தறிந்தோம்—இது
நமக்கே யுரிமையா
மென்ப தறிந்தோம்—இந்தப்
பூமியிலெவர்க்கு மினி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை
செய்து வாழ்வோம். (ஆடுவோமே)

---

10. பெண்கள் விடுதலைக் கும்மி.

காப்பு.

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக்களிப்பொடு நாம் பாடக்
கண்களிலே யொளி போல வுயிரில்
கலந் தொளிர் தெய்வநற் காப்பாமே.

1. கும்மியடி தமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கை கொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி. (கும்மி)

2. எட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார் [மென்ற
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போ
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

3. மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி. (கும்மி)

4. நல்ல விலைகொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மந்நிலை
கூட்டி வைத்தார் பழி கூட்டி விட்டார். (கும்மி)

5. கற்பு நிலை யென்று சொல்ல வந்தா ரிரு
கக்ஷிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

6. பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி. (கும்மி)

7. வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடுவோம். (கும்மி)

8. காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி. (கும்மி)

11. செந்தமிழ் நாடு.

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள்
(செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ் நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்ட தோர் வையை பொருனை நதி—யென
மேவிய யாறு பல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

4. முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ் நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு (செந்தமிழ்)

5. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ் செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு.
(செந்தமிழ்)

6. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு.
(செந்தமிழ்)

7. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி கார மென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

8. சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக் கொடி மீன் கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (செந்தமிழ்)

9. விண்ணை யிடிக்கும் தலை யிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு. (செந்தமிழ்)

10. சீனமிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

---

12. ஆறு துணை.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

1. கணபதி ராயன்—அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந் திடவே—விடுதலை
கூடி மகிழ்ந்திடவே.

(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

2. சொல்லுக் கடங்கா வே—பரா சக்தி
சூரத் தனங்க ளெல்லாம் ;
வல்லமை தந்திடு வாள்—பரா சக்தி
வாழி யென்றே துதிப்போம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

3. வெற்றி வடிவேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம் ;
சுற்றி நில்லாதே போ !—பகையே !
துள்ளி வருகுது வேல்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

4, தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனி யிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே—கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய் திடுவோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

5. பாம்புத் தலை மேலே—நடஞ்செயும்
பாதத்தினைப் புகழ் வோம்
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந் திடுவோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

6. செல்வத் திரு மகளைத்—திடங் கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வ மெல்லாந் தருவாள்—நம தொளி
திக்கனைத்தும் பரவும்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

13. பக்தி.

ராகம்—பிலஹரி.

பல்லவி

பக்தியினாலே—தெய்வ—பக்தியினாலே.

சரணங்கள்.

1. பக்தியினாலே—இந்தப்
பாரினிலெய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தந் தெளியும்,—இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,
வித்தைகள் சேரும்,—நல்ல
வீர ருறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவ முண்டாம்,—நெஞ்சிற்
சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும், (பக்தியினாலே)

2. கல்வி வளரும்,—பல
காரியங் கையுறும், வீரிய மோங்கிடும்,
அல்லலொழியும்,—நல்ல
ஆண்மை யுண்டாகும், அறிவு தெளிந்திடும்,
சொல்லுவதெல்லாம்—மறைச்
சொல்லினைப் போலப் பயனுள தாகும், மெய்
வல்லமை தோன்றும்,—தெய்வ
வாழ்க்கையுற்றேயிங்கு வாழ்ந்திடலாம், உண்மைப்
(பக்தியினாலே)

3. சோம்பலழியும்,—உடல்
சொன்ன படிக்கு நடக்கும், முடிசற்றுங்
கூம்புதலின்றி—நல்ல
கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்,
வீம்புகள் போகும்,—நல்ல
மேன்மையுண்டாகிப் புயங்கள் பருக்கும், பொய்ப்
பாம்பு மடியும், மெய்ப்
பரம் வென்று நல்ல நெறிகளுண்டாய் விடும்.
(பக்தியினாலே)

14. ஸரஸ்வதி தேவியின் புகழ்.

ராகம்—ஆனந்த பைரவி. தாளம்—சாப்பு.

1. வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓது வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள். (வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியினாவை யிருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

3. தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக் குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம் (வெள்ளைத்)

4. செந்தமிழ் மணி நாட்டிடையுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!

வந்தனம் மிவட் கேசெய்வ தென்றல்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி யதன் மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் மிவள் பூசனை யன்றும். (வெள்ளைத்)

5. இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல். (வெள்ளைத்)

---

15. முருகன் பாட்டு.

ராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—ஆதி.

பல்லவி

முருகா—முருகா—முருகா.

சரணங்கள்

1. வருவாய் மயில் மீதினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

2. அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே! (முருகா)

3. சுருதிப் பொருளே, வருக.
துணிவே, கனலே, வருக.
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகா)

4. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா, பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வேலவனே, சரணம். (முருகா)

5. அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய், அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய். (முருகா)

6. குருவே, பரமன் மகனே
குகையில் வளருங் கனலே,
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
ஸமராதிப னே, சரணம் சரணம். (முருகா)

---

16. சந்திரமதி பாட்டு.*

ராகம்—ஆனந்த பைரவி. தாளம்—ஆதி.

1 பச்சைக் குழந்தை யடி—கண்ணிற்
பாவை யடி சந்திரமதி.
இச்சைக் கினிய மது;—என்றன்
இரு விழிக்குத் தே நிலவு;
நச்சுத் தலைப் பாம்புக் குள்ளே—நல்ல
நாக மணி யுள்ள தென்பார்;
துச்சப் படு நெஞ்சிலே—நின்றன்
சோதி வளரு தடி.

---

* "சந்திரமதி" என்பது காதல் கொண்டவளாகிய பெண்ணைக் குறிப்பது; சந்திரன் காதலுக்கு அதிதேவதை யாதலால்.

2. பேச்சுக் கிடமே தடி—நீ
பெண் குலத்தின் வெற்றியடி
ஆச்சர்ய மாயையடி—என்றன்
ஆசைக் குமரி யடி
நீச்சு நிலை கடந்த—வெள்ள
நீருக் குள்ளே வீழ்ந்தவர் போல்
தீச் சுடரை வென்ற வொளி—கொண்ட
தேவி, நினை விழுந்தே னடி.

3. நீலக் கடலினி லே—நின்றன்
நீண்ட குழல் தோன்று தடி ;
கோல மதியினிலே—நின்றன்
குளிர்ந்த முகங் காணு தடி ;
ஞால வெளியினி லே—நின்றன்
ஞான வொளி வீசு தடி ;
கால நடையினி லே—நின்றன்
காதல் விளங்கு தடி. (பச்சைக் குழந்தையடி)

---

17. கண்ணன்—என் விளையாட்டுப் பிள்ளை

(கேதாரம் - கண்டஜாதி - ஏகதாளம்.

ரஸங்கள் : அற்புதம், சிருங்காரம்.)

தீராத விளையாட்டு பிள்ளை—கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை. (தீ)

1. தின்னப் பழங்கொண்டு தருவான் ;—பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால்—அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான். (தீ)

2. தேனொத்த பண்டங்கள் கொண்டு—என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான் ;
மானொத்த பெண்ணடி யென்பான்—சற்று
மனமகிழு நேரத்திலே கிள்ளி விடுவான். (தீ)

3. அழகுள்ள மலர் கொண்டு வந்தே—என்னை
அழ அழச் செய்து பின் " கண்ணை மூடிக்கொள் ;
குழலிலே சூட்டுவேன் " என்பான்—என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான். (தீ)

4. பின்னலைப் பின்னின் றிழுப்பான் ;—தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான் ;
வன்னப் புதுச்சேலை தனிலே—புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான். (தீ)

5. புள்ளாங் குழல் கொண்டு வருவான் ;—அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான் ;
கள்ளால் மயங்குவது போலே—அதைக்
கண்மூடி வாய்த்திறந் தேகேட் டிருப்போம். (தீ)

6. அங்காந் திருக்கும்வாய் தனிலே—கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான் ;
எங்காகிலும் பார்த்ததுண்டோ ?—கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ? (தீ)

7. விளையாட வாவென் றழைப்பான் ;—வீட்டில்
வேலையென் றாலதைகேளா திழுப்பான் ;
இளையாரொ டாடிக் குதிப்பான் ;—எம்மை
இடையிற் பிரிந்து போய் வீட்டிலே சொல்வான். (தீ)

8. அம்மைக்கு நல்லவன் கண்டீர் !—மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கு மஃதே ;
எம்மைத் துயர் செய்யும் பெரியோர்—வீட்டில்
யாவர்க்கு நல்லவன் போலே நடப்பான். (தீ)

9. கோளுக்கு மிகவும் சமர்த்தன் ;—பொய்மை
குத்திரம் பழி சொலக் கூசாச் சழக்கன் ;
ஆளுக் கிசைந்தபடி பேசி—தெருவில்
அத்தனை பெண்களையு மாகா தடிப்பான். (தீ)

---

18. ஜீவன் முக்தி

ராகம்—கமாஸ். தாளம்—ஆதி.

பல்லவி.

ஜயமுண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு. (ஜய)

அனுபல்லவி.

பயனுண்டு பக்தியினாலே—நெஞ்சிற்
பதிவுற்ற குலசக்தி சரணுண்டு பகையில்லை. (ஜய)

சரணங்கள்.

1. புயமுண்டு குன்றத்தைப் போலே—சக்தி
பொற் பாதமுண்டதன் மேலே
நியமமெல்லாம் சக்தி நினைவன்றிப் பிறிதில்லை ;
நெறியுண்டு ; குறியுண்டு ; குலசக்தி வெறியுண்டு.
(ஜய)

2. மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்—தெய்வ
வலியுண்டு தீமையைப் போக்கும் ;
விதியுண்டு ; தொழிலுக்கு விளைவுண்டு ; குறைவில்லை
விசனப் பொய்க் கடலுக்குக்குமரன்கைக்
கணையுண்டு. (ஜய)

3. அலைபட்ட கடலுக்குமே மேலே—சக்தி
அருளென்னுந் தோணியினாலே
தொலையெட்டிக் கரையுற்றுத் துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில் முடிதொட்டு (ஜய)

---

19. முரசு.

வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக்
கொட்டு முரசே
வேத மென்றும் வாழ்க வென்று
கொட்டு முரசே
நெற்றி யொற்றைக் கண்ண னோடே
நிர்த்தனஞ் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று
கொட்டு முரசே.

1. சாதிக் கொடுமைகள் வேண்டாம்;—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

2. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்;
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

3. கண்களிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கொடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடும், காணீர்.

4. தெய்வம் பல பல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலு மொன்றாய்—எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்.

5. அன்பென்று கொட்டு முரசே,—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரு மொன்றென்று கொண்டால்.

6. உடன் பிறந்தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல்லாரும்;
இடம் பெரிதுண்டு வையத்தில்;—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

---

20. பாப்பா பாட்டு.

1. ஓடி விளையாடு பாப்பா,—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா,—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2. சின்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா,
வண்ணப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.

3. கொத்தித் திரியு மந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடு மந்தக் காக்காய்—அதற்
கிரக்கப் படவேணும் பாப்பா.

4. பாலைப் பொழிந்து தரும் பாப்பா,—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா,
வாலைக் குழைத்து வரும் நாய் தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

5. வண்டி யிழுக்கும் நல்ல குதிரை—நெல்
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

6. காலை யெழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

7. பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.

8. பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்து விடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.

9. துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்து விட லாகாது பாப்பா,
அன்பு மிகுந்த தெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கி விடும் பாப்பா.

10. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா,—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா,
தேம்பி யழுங் குழந்தை நொண்டி,—நீ
திடங் கொண்டு போராடு பாப்பா.

11. தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனியதடி பாப்பா,—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

12. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே,—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா,
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

13. வடக்கில் இமயமலை பாப்பா,—தெற்கில்
வாழுங் குமரி முனை பாப்பா,
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

14. வேதமுடைய திந்த நாடு,—நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு,
சேதமில்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வ மென்று கும்பிடடி பாப்பா.

15. சாதிகள் இல்லையடி பாப்பா;—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

16. உயிர்களிடத்தில் அன்பு வேணும்;—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமை யடி பாப்பா.

21. மஹாத்மா காந்தி

(வாழ்த்து)

1. வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!

2. அடிமை வாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்,
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

A 2313

22. புது வருஷம்

ஆசிரியப்பா.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற் றமிழர்!
வாழிய பாரத மணித் திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மற மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக!
நந் தேயத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!